**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்</u>**
**<u>முன்னிலை</u> : திருமதி. கா. ஸ்ரீபதி, B.A., L.L.B.,**
நீதித்துறை நடுவர், வாணியம்பாடி.
2026ம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 57/2023</u>

<u>CNR NO.TNTU09-002573-2023</u>

| வரிசை எண். | விளக்கம் | விவரங்கள் |
|---|---|---|
| 1. | குற்றமுறையிடுபவர் | அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,<br>அம்பலூர் காவல் நிலையம்,<br>குற்ற எண். 66/2022 |
| 2. | எதிரிகள் | 1. கனகராஜ் த/பெ. கண்ணாச்சி<br>2. சிலம்பரசன் த/பெ. மாணிக்கம் |
| 3. | குற்றம் | இ.த.ச பிரிவுகள் 294(b), 323, 506(1). |
| 4. | சம்பவம் நடந்த தேதி | 16.04.222016.04.22 |
| 5. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள். | 17.04.2022 |
| 6. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | Station Bail<br>18.04.2022-18.04.2022 |
| 7. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 06.04.2023 |
| 8. | கு.வி.மு.ச.பிரிவு 241-ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | 20.06.2023 |
| 9. | கு.வி.மு.ச.பிரிவு 317-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யபட்ட விவரம் அதன் முடிவுகள். | 1.07.03.2026 குவிமுச.பிரிவு 320(2)-ன் கீழ் 459/2026. |
| 10 | வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | அ.சா.1,அ.சா.2 -07.03.2026<br>அ.சா.3-24.03.2026 |
| 11 | எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச.313(1) (ஆ)-ன் கீழ் வினவிய நாள் | 25.03.2026 |

| | | |
|---|---|---|
| 12 | எதிரிகள் மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | - |
| 13 | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 27.03.2026 |
| 14 | தீர்வு | குவிமுச பிரிவு 248 (1) கீழ் விடுதலை. |

**நீதித்துறை படிவம் எண்: 61**

புகார்தாரர் : அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர், அம்பலூர் காவல் நிலையம்.

எதிரிகள் : 1. கனகராஜ் த/பெ. கண்ணாச்சி
2. சிலம்பரசன் த/பெ. மாணிக்கம்

குற்றம் : இ.த.ச பிரிவுகள் 294(b), 323, 506(1).

முடிவு : இறுதியாக, அரசு தரப்பில் 1 மற்றும் 2ம் எதிரிகளுக்கு எதிரான இ.த.ச பிரிவுகள் 294(b), 323, 506(1) குற்றச்சாட்டுகள் ஆனது சந்தேகத்திற்கு இடம் இன்றி நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலன்களை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்வது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்த நீதிமன்றம் தீர்மானித்து எதிரிகளை வழக்கிலிருந்து குவிமுச பிரிவு 248 (1) கீழ் விடுதலை செய்து உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

| வ. எண் | எதிரிகள் பெயர் | தந்தை/கணவர் பெயர் | சாதி (அ) இனம் | தொழில் | முகவரி | வயது |
|---|---|---|---|---|---|---|
| 1 | கனகராஜ் | கண்ணாச்சி | இந்து | கூலி | ராமநாயக்கபேட்டை, வாணியம்பாடி | 32 |
| 2 | சிலம்பரசன் | மாணிக்கம் | இந்து | கூலி | ராமநாயக்கபேட்டை, வாணியம்பாடி | 37 |

| தேதி | | | | | | | தாமதம் (ம) அதன் விளக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| குற்றம் | புகார் அறிக்கை | கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் | விசாரணையின் தொடக்கம் | விசாரணையின் முடிவு | உத்தரவு | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 16.04.22 | 17.04.22 | Station Bail– 18.04.2022 | Station Bail– 18.04.2022 | 20.06.23 | 25.03.26 | 27.03.26 | – |

இவ்வழக்கானது 06.04.2023 அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு 25.03.2026–ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றதுறை உதவி வழக்கறிஞர் நிலை 1 திருமதி.மகேஸ்வரி அவர்கள் ஆஜராகியும் எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.S.ராகவன் B.E., B.L., அவர்கள் ஆஜராகியும் இது நாள் வரை விசாரணை செய்தும் வழக்கின் சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் இவ்வழக்கில் வழங்கிடும்

**<u>தீர்ப்புரை</u>**

**1. குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:**

இவ்வழக்கில் அம்பலூர் காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட பகுதியில் கடந்த 16.04.2022ம் தேதி பகல் 16.30 மணிக்கு வாதியான சாட்சி 1 அருளானந்தன் மற்றும் சாட்சி 2 செந்தில்குமார் ஆகியோர் இராமநாயக்கன்பேட்டை முனியன் கொல்லை கூட்ரோட்டிடம் இருந்தபோது எதிரி 1 கனகராஜ், எதிரி 2 சிலம்பரசன் ஆகியோர்கள் சாட்சிகள் 1, 2 ஆகியோர்களை சாக்குபோக்கு பேசியுள்ளார்கள். ஏன் தேவையில்லைமல் வம்பு செய்கிறீர்கள என்று கேட்டதற்கு எதிரி 1, 2 ஆகியோர்கள் சாட்சிகள் 1, 2 ஐ டேய் தேவிடியா பசங்களா நாங்கள் அப்படி தான் பேசுவோம் என்று அசிங்கமாக திட்டியதாகவும், சாட்சி 1ஐ எதிரிகள் கையால் அடித்தும், கீழே தள்ளியும், காலால் உதைத்தும், சாட்சி 2ஐ வயிற்றின் மீது கையால் குத்தி சொற்பகாயம் ஏற்படுத்தியதாகவும், எதிரிகள் சாட்சி 1, 2ஐ பார்த்து எங்களிடம் வம்பு வைத்துக்கொண்டால் உயிரோடு விடமாட்டோம் என்று கொலை மிரட்டல் விடுத்துள்ளார். எனவே, எதிரிகளின் மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 323, 506(i)–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்ததாக அம்பலூர் காவல் உதவி ஆய்வாளர் எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரிகள் மீது முகாந்திர வழக்கு இருப்பதால் இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தால் இ.த.ச. பிரிவுகள் 294(பி), 323, 506(i)–ன் கீழ் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இந்த வழக்கில் எதிரிகள் ஆஜரானதும், இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்தின் நகல்கள் அனைத்தும் எதிரிகளுக்கு கு.வி.மு.ச. பிரிவு 207ன்படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. குற்றம்சாட்டப்பட்ட நபருக்கு போதிய கால அவகாசம் கொடுத்து, ஆவணங்களை பரிசீலித்தும் எதிரிகள் மீதான குற்ற செயல்களை விசாரிக்க போதுமான முகாந்திரம் இருந்த காரணத்தினால், எதிரிகளின் மீது இ.த.ச. பிரிவுகள் 294(பி), 323, 506(i)–ன் கீழ் குற்றச்சாட்டுகளை வனைந்து விளக்கிக் கூறி வினவியபோது, எதிரிகள் குற்றத்தை மறுத்துரைத்ததால் அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.3** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8** வரையிலான சான்றாவணங்கள் ஆகியவை குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**5. அரசு தரப்பு சாட்சியங்களின் மூலம் தெரியவரும் அரசுதரப்பு வழக்கின் சுருக்கம் :**

5(i) அ.சா.1 அருளானந்தன் இவ்வழக்கு சம்பவத்தில் காயமுற்றவர் மற்றும் புகார்தாரர் ஆவார். அ.சா.1 அருளானந்தன் சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன்பு நிலத்தில் வேலை செய்து கொண்டிருந்தபோது சுகர், BP உள்ளதால் மயங்கி கீழே விழுந்துவிட்டதால் வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்துள்ளார். வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் திரு. சம்பத், சிறப்பு உதவி ஆய்வாளர் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த அ.சா.1 அருளானந்தன் என்பவரை விசாரித்து அ.சா.ஆ.3 புகார் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5(ii) அ.சா.3 திரு.சம்பத், சிறப்பு உதவி ஆய்வாளர் புகார் வாக்குமூலத்திற்கு ஏற்ப நிலைய குற்ற எண் 66/2022 இ.த.ச பிரிவுகள் 294(பி), 323, 506(1)–ன் கீழ் அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். பின்பு, அதே நாள் 12.30

மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் பிச்சாண்டி மற்றும் சிவானந்தம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.5 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார்.

5(iii) பின்பு, அதே நாள் சாட்சிகள் அ.சா.1 அருளானந்தன், அ.சா.2 செந்தில்குமார், வேலாயுதம் மற்றும் பார்வை மகசர் சாட்சிகள் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் எதிரிகளை 18.04.2022ம் தேதி அம்பலூர் பஸ்டாப்பிடம் முறைப்படி கைது செய்து தக்க இருநபர் நிலைய ஜாமினில் விடுவித்துள்ளார். பின்னர் இவ்வழக்கின் புலன்விசாரணையை முடித்து மேல்கட்ட புலன்விசாரணைக்காக உதவி ஆய்வாளர் திரு.ராமமூர்த்தி என்பவரின் பார்வைக்கு வைத்ததையடுத்து அவர் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அ.சா.1 மற்றும் அ.சா.2க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. பிரவீன்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8 விபத்துப் பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ்களைப் பெற்றுள்ளார். பின்பு புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது குற்றம் உண்மையென தெரியவந்ததால், எதிரிகள் மீது இ.த.ச சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 506(i)–ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

6. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்தும் மற்றும் சான்றாவணங்களில் இருந்தும் குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு பாதகமாக அமைந்ததை சாட்சிய சூழ்நிலைகளை எதிரிகளிடம் குவிமுச பிரிவு 313(i)(ஆ)–ன் கீழ் வினவியபோது எதிரிகள் மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பொய் என கூறினார்கள். மேலும். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில், எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சம்பவத்தை தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்</u>

7. இவ்வழக்கில் கடந்த 16.04.2022ம் தேதி பகல் 16.30 மணிக்கு அ.சா.1 அருளானந்தன் மற்றும் அ.சா.2 செந்தில்குமார் ஆகியோர் இராமநாயக்கன்பேட்டை முனியன் கொல்லை கூட்ரோட்டிடம் இருந்தபோது எதிரி 1 கனகராஜ், எதிரி 2 சிலம்பரசன் ஆகியோர்கள் அ.சா.1,2ஐ  சாக்குபோக்கு பேசியுள்ளார்கள். ஏன் தேவையில்லைமல் வம்பு செய்கிறீர்கள என்று கேட்டதற்கு எதிரி 1, 2 ஆகியோர்கள் அ.சா.1, 2 ஐ டேய் தேவிடியா பசங்களா நாங்கள் அப்படி தான் பேசுவோம் என்று அசிங்கமாக திட்டியதாகவும், அ.சா.1ஐ எதிரிகள் கையால் அடித்தும், கீழே தள்ளியும், காலால் உதைத்தும், அ.சா.2ஐ வயிற்றின் மீது கையால் குத்தி சொற்பகாயம் ஏற்படுத்தியதாகவும், எதிரிகள் அ.சா.1, 2ஐ பார்த்து எங்களிடம் வம்பு வைத்துக்கொண்டால் உயிரோடு விடமாட்டோம் என மிரட்டல் விடுத்ததாக அரசு தரப்பில் எதிரிகளின் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

8. இவ்வழக்கில் முக்கிய சாட்சியான புகார்தாரர் மற்றும் காயமுற்ற சாட்சியான அருளானந்தன் அரசு தரப்பில் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.1 அருளானந்தன் அவரது நீதிமன்ற விசாரணையின்போது, " ஆஜர் எதிரிகளை தெரியும், சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன்பு நிலத்தில் வேலை செய்து கொண்டிருந்தபோது எனக்கு சுகர், BP உள்ளதால் மயங்கி கீழே விழுந்துவிட்டேன். மயக்கம் தெளிந்து பார்த்தபோது வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் இருந்தேன். அங்கு போலிசார் வந்து என்னிடம் வெள்ளை தாளில் கையொப்பம் வாங்கினார்கள். எதற்காக என்று தெரியாது.  போலிசார் என்னை விசாரிக்கவில்லை. " என அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார் என்பது புலனாகிறது.

9. வழக்கின் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 செந்தில்குமார் தனது நீதிமன்ற விசாரணையின்போது, "  ஆஜர் எதிரிகளை தெரியும், சுமார்  ஒன்றரை வருடங்களுக்கு முன்பு என் அண்ணன் அ.சா.1  நிலத்தில் வேலை செய்து கொண்டிருந்தபோது எனக்கு சுகர், BP உள்ளதால் மயங்கி கீழே விழுந்துவிட்டார். அந்த தகவலை கேட்டு நானும் மயங்கி விழுந்துவிட்டேன். அதனால் வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு

சிகிச்சைக்காக சென்றோம். போலிசார் என்னை விசாரித்தனர். " என அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார் என்பது புலனாகிறது.

10. அரசு தரப்பில் பட்டியல் சாட்சிகள் 3, 4, 5, 6, 8 ஆகியோர்கள் விசாரிப்பதிலிருந்து விலக்கப்பட்டுள்ளார்கள். அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள வழக்கின் புகார்தாரர் மற்றும் காயமுற்ற சாட்சியான அ.சா.1 அருளானந்தன், கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 செந்தில்குமார் ஆகியோர்கள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தின் அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ததில் அரசு தரப்பு வழக்கை வலுசேர்க்கும் வகையில் எவ்வித சங்கதிகளும் வெளிக்கொணரப்படவில்லை. ஆகையால், அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையிலானவர்களின் சாட்சியம் அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க உகந்தது அல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது.

11. அ.சா.3 திரு.சம்பத், சிறப்பு உதவி ஆய்வாளர் அவரது சாட்சியத்தில் வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் அ.சா.1ஐ விசாரித்து அ.சா.ஆ.3 புகார் வாக்குமூலத்தை பெற்று அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.5 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் தயார் செய்ததை குறித்தும், அனைத்து சாட்சிகளையும் தனித்தனியாக விசாரித்து, எதிரிகளை இருநபர் நிலைய ஜாமினில் விடுவித்ததைக் குறித்தும், வழக்கு கோப்பை திரு.ராமமூர்த்தி, உதவி ஆய்வாளரிடம் ஒப்படைத்ததை அவர் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அ.சா.1 மற்றும் அ.சா.2 க்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்து அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8 விபத்துப் பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ்களைப் பெற்று, புலன் விசாரணை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்ததைக் குறித்து சாட்சியம் அளித்துள்ளார் என்பது புலனாகிறது.

12. அ.சா.1 அருளானந்தன் புகார் வாக்குமூலத்திலும், போலீசார் விசாரணையின்போதும், எதிரிகள் 1, 2 ஆகியோர் அ.சா.1, 2 ஐ டேய் தேவிடியா பசங்களா நாங்கள் அப்படி தான் பேசுவோம் என்று அசிங்கமாக திட்டியும், அ.சா.1ஐ எதிரிகள்

கையால் அடித்தும், கீழே தள்ளியும், காலால் உதைத்தும், அ.சா.2ஐ வயிற்றின் மீது கையால் குத்தி சொற்பகாயம் ஏற்படுத்தியதாகவும், எதிரிகள் அ.சா.1, 2ஐ பார்த்து எங்களிடம் வம்பு வைத்துக்கொண்டால் உயிரோடு விடமாட்டோம் என மிரட்டல் விடுத்ததாக கூறிவிட்டு, அதற்கு முற்றிலும் மாறாக, தனது நீதிமன்ற விசாரணையின்போது, அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக நிலத்தில் வேலை செய்து கொண்டிருந்தபோது சுகர், BP உள்ளதால் மயங்கி கீழே விழுந்ததால் மருத்துவமனைக்குச் சென்றதாக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அதற்கேற்றார்போல், வழக்கு நிலுவையில் இருக்கும்போது எதிரிகளும், அ.சா.1ம் சமாதானம் ஆகிவிட்டதாக கொடுத்த 07.03.2026ம் தேதி கு.வி.மு.ச பிரிவு 320ன் கீழ் குற்ற பல்வகை மனு எண் 459/2026ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி, மனுவானது இவ்வழக்கின் சில குற்றங்கள் சட்டப்படியாக சமரசம் தீர்த்துக்கொள்ள முடியாத குற்றங்கள் என்பதால் தள்ளுபடி செய்யப்பட்டது.

13. இவ்வழக்கில் புகார்தாரர் மற்றும் காயமுற்ற சாட்சியான அ.சா.1 அருளானந்தன் புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.ஆ.3 கையெழுத்து மட்டும் ஒப்புக்கொண்டு கையெழுத்தை போலிசார் என்னிடம் வந்து வெள்ளை தாளில் கையொப்பம் வாங்கினார்கள் என சாட்சியம் அளித்துள்ளதால் வழக்கின் மூல ஆதாரமான அ.சா.ஆ.3 புகார் வாக்குமூலமே சந்தேகத்திற்கு உள்ளாவதாலும், புகார்தாரர் மற்றும் காயமுற்ற சாட்சியான அ.சா.1 அருளானந்தன் **நிலத்தில் வேலை செய்து கொண்டிருந்தபோது சுகர், BP உள்ளதால் மயங்கி கீழே விழுந்ததால்** மருத்துவமனைக்குச் சென்றதாக பிறழ் சாட்சியம் அளித்துள்ளதாலும், கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 செந்தில்குமார் நிலத்தில் வேலை செய்து கொண்டிருந்தபோது சுகர், BP உள்ளதால் மயங்கி கீழே விழுந்துவிட்டார் என்றும், அந்த தகவலை கேட்டு மயங்கி விழுந்துவிட்டேன் என பிறழ் சாட்சியம் அளித்துள்ளதாலும், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையிலானவர்கள் அரசு தரப்பு வழக்கை வலுசேர்க்கும் வகையில் சாட்சியம் அளிக்காத நிலையில், புலன் விசாரணை அதிகாரியான அ.சா.3ன் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு, எதிரிகள் குற்றம் புரிந்தார்கள் என தீர்மானிக்க இயலாது என்பதாலும், அரசு தரப்பில் எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட இ.த.ச பிரிவுகள் 294(பி),

323, 506(1) ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று மேற்கண்ட பிரச்சணைக்கு அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

14. **முடிவாக,** இவ்வழக்கின் எதிரிகள் மீதான இ.த.ச. பிரிவுகள் 294(பி), 323, 506(1) கீழ் அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தகுநிலை ஐய்யப்பாட்டிற்கு இடமற்ற வகையில் நிரூபணம் செய்யாததால் 1 மற்றும் 2ம் எதிரிகள் குற்றவாளிகள் இல்லையென முடிவு செய்து எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 248(1)ன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

15. இவ்வழக்கில் வழக்கு சொத்து இல்லை. எதிரிகள் கொடுத்துள்ள பிணை பத்திரத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்து சரிபார்க்கப்பட்டு இன்று 2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/–கா.ஸ்ரீபதி)
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

**அரசு தரப்பு சாட்சிகள்**

| | | |
|---|---|---|
| 1 | அ.சா.1 | திரு. அருளானந்தன் |
| 2 | அ.சா.2 | திரு. செந்தில்குமார் |
| 3 | அ.சா.3 | திரு. சம்பத், சிறப்பு உதவி ஆய்வாளர். |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | 17.04.2022ஆம் தேதியிட்ட புகார்வாக்கு மூலத்தில் உள்ள கையொப்பம். |

| | | |
|---|---|---|
| 2. | அ.சா.ஆ.2 | 07.03.2026ஆம் தேதியிட்ட சமாதான மனு. |
| 3. | அ.சா.ஆ.3 | 17.04.2022ஆம் தேதியிட்ட புகார்வாக்கு மூலம். |
| 4. | அ.சா.ஆ.4 | 17.04.2022ஆம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை. |
| 5. | அ.சா.ஆ.5 | 17.04.2022ஆம் தேதியிட்ட பார்வை மகசர் . |
| 6. | அ.சா.ஆ.6 | 17.04.2022ஆம் தேதியிட்ட மாதிரி வரைபடம் . |
| 7. | அ.சா.ஆ.7 | 16.04.2022ஆம் தேதியிட்ட சிலம்பரசனின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று. |
| 8. | அ.சா.ஆ.8 | 16.04.2022 ஆம் தேதியிட்ட அருளானந்தனின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று. |

**<u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றுப் பொருட்கள்</u> –** இல்லை.

**<u>எதிரி தரப்பு சான்றாவணம்</u> –** இல்லை

**<u>குறிப்பு</u>**

1) எந்த சாட்சியும் 3 முறைக்குமேல் நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.

2) வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

3) முடிவு காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

(ஒம்/–கா.ஸ்ரீபதி)
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

//உண்மை நகல்//

SRIPATHI K
JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI
Digitally signed by SRIPATHI K
Location: TIRUPATHUR

நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.